RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s23

OPEN ACCESS

# குறிஞ்சித்தேன் புதினம் வழியாக மலைவாழ் மக்களின் இறைக்கொள்கைகள்

**பா. கார்த்திகைச்செல்வி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, மதுரை சிவகாசி நாடார்கள் பயோனியர் மீனாட்சி பெண்கள் கல்லூரி, பூவந்தி-630611, தமிழ்நாடு, இந்தியா.

# The Theological Principles of the Tribs through the Fiction Kurinjithen

**P. Karthigai Selvi** [a, *]

[a] Department of Tamil, Madurai Sivakasi Nadar's Pioneer Meenakshi Women's College, Poovanthi-630611, Tamil Nadu, India.

* Corresponding Author: kpselvadhanam@gmail.com

Received: 04-01-2021
Revised: 05-04-2021
Accepted: 12-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

The theological principles of the tribs have been concentrated through the novel Kurinjithen of Rajam Krishnan, the creator of the field study of the religious principles based on literature and the production of literature. The study highlights the worship of the lord, the cults, the religious beliefs and exercises identified and related to the Lord. The act of worshipping the incredible divinity in the form of minor deity worship can be traced through the investication. The study also presents the place for the method of study, which matches the beliefs of the people with saivism theories.

**Keywords:** Rajam Krishnan, Lord, Worship, Kurinji Then, Literature.

## முன்னுரை

தமிழ்ச்சமுதாயம் ஐவகை நிலங்களாக முதல், கரு, உரி என்ற அடிப்படையில் பாகுபடுத்தப்பட்ட காலத்திலிருந்தே கருப்பொருட்களில் முதன்மையானதாக தெய்வம் என்ற கூறு அமைந்துள்ளது. மனித நாகரிகம் வளர வளர இறைக்கோட்பாடுகளும், கொள்கைகளும் வளர்ச்சியடைந்து வந்துள்ளன என்றால் மிகையில்லை. நாகரிகத்துடன் தொடர்ந்துவரும் இறைச்சிந்தனைகளை இலக்கியங்களும் பிரதிபலித்து வருகின்றன. சமய இலக்கியங்களாகச் சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறித்துவம், இஸ்லாம் என எண்ணற்ற இலக்கியங்கள் தமிழில் உள்ளன. அவையன்றி மனிதனின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட அகப்புற இலக்கியங்களும் இறைவனோடு தொடர்புக் கொண்டு அமைந்துள்ளன. அவ்வகையில் இராஜம் கிருஷ்ணன் அவர்களின் குறிஞ்சித்தேன் புதினத்தின் வழி மலைவாழ் மக்களின் இறைக்கொள்கைகள் குறித்து ஆராய்வதாக இவ்ஆய்வுரை அமைகிறது.

## குறிஞ்சித்தேன் சித்திரிக்கும் மலைவாழ்மக்கள்

குறிஞ்சித்தேன் புதினம் நீலமலையில் உள்ள மரகதமலை ஹட்டி என்ற பகுதியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது ஆகும். அங்கு வாழும் கவுடர் இன மலைவாழ் மக்கள் முதன்மைக் கதாபாத்திரங்களாக அமைகின்றனர். அவர்களின் வாழ்க்கை முறையில் இடம்பெறும்

இறைக்கொள்கைகள் இறைவனின் பெயர், வழிபாட்டு முறைகள், இறைவன் பற்றிய நம்பிக்கைகள் மற்றும் செயல்கள் என்ற அடிப்படையில் ஆராயப்பட்டு இங்கு விளக்கப்படுகின்றன.

## மலைவாழ் மக்களின் இறைவன்

பிரபஞ்சத்தில் மனித சக்திக்கும் மீறிய ஒரு சக்தியை இறைவன், தெய்வம், கடவுள், ஆண்டவன் என்றெல்லாம் பெயரிட்டு மக்கள் அழைக்கின்றனர். இறைவன் எங்கும் நிறைந்தவன். இறை என்ற சொல் இறு என்ற பகுதி அடியாகப் பிறந்தது. எங்கும் நீக்கமற நிறைந்த பரம்பொருள் இறைவன் (புழன) எனப் பெயர் பெற்றது" என்று வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகிறது (Balusamy, 2002). இறைவன் ஒருவன் என்றாலும் அவனுக்குப் பல பெயர்கள் இட்டு வழிபடுவது மக்கள் வழக்கமாகிறது. சங்ககாலத்தில் மலை நிலத்துக்குரிய இறைவனாக முருகன் இருந்ததைச் "சேயோன் மேய மைவரை உலகமும்" என்ற தொல்காப்பிய நூற்பா வழி அறிய இயலுகிறது (Tholkappiyar, 2000).

புதினத்தில் சுட்டப்படும் மலைவாழ் மக்களின் இறைவனாக சிவபெருமான் இருக்கிறார். இரியஉடைய ஈசர் (பெரியவராக விளங்கும் இறைவன்), ஈசுவரனார், நஞ்சுண்டேசுவரர், மாதலிங்கேசுவரர், அரன், பஸவேசன், பரமேசன், திங்களும் கங்கையும்; தரித்த எம்பிரான், மண்ணையும் நீரையும் காற்றையும் தந்து வற்றாத வளமைக்கு வழிகாட்டிய இறைவன், கங்கைவார் சடையில் திங்கள் அணிந்த மங்கை பாகன், புல்லிலும் பூண்டிலும் உயிர்த்தத்துவமாக விளங்கும் ஐயன், மன்றிலாடும் எம்பிரான் என்றெல்லாம் இறைவனைக் குறிப்பிடுகிறது புதினம். கதாபாத்திரங்களின் பெயர்களும் பெரும்பாலும் இறைவன் பெயர்களை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. லிங்கையா, மாதன், மாதி, நஞ்சன், நஞ்சம்மை போன்றப் பெயர்களை இதற்குச் சான்றாகச் சுட்டலாம். பெரும்பாலும் இறைவனது பெயரையே மனிதர்களுக்குச் சூட்டும் அவர்களது கொள்கையை இதன்வழி அறிய இயலுகிறது.

மனித உருவில் வாழ்ந்து மறைந்தவர்களை அவர்களின் அருஞ்செயல் காரணமாகத் தெய்வமாக்குவதும் வழக்கில் உள்ளது. அவ்வகையில் குறிஞ்சித்தேன் புதினத்தில் இடம்பெறும் மலைவாழ் மக்கள் அவர்களின் முன்னோரான ஹெத்தப்பர் என்பவரின் நினைவிடத்தையும் வணங்கி வருகின்றனர். "அந்த மலைப் பிராந்தியத்தில் முதன் முதலாக வந்து ஊன்றிய ஹெத்தப்பரின் நினைவுக்கோயில் அது. அந்தப் பக்கத்து மலைக்காரர் அனைவரும் அவருடைய வழி வந்தவர்கள் என்பது நம்பிக்கை" முன்னோர்களைத் தெய்வமாக்கும் இறைக்கொள்கையை இதன்வழி அறியமுடிகிறது (Rajam Krishnan, 2011).

## வழிபாட்டு முறைகள்

பெருந்தெய்வ வழிபாடுகள் அனைத்து இடங்களிலும் ஒன்றுபோல் அமைகின்றன. ஆனால் சிறுதெய்வ வழிபாடு ஒவ்வொரு சமூகத்திலும் வேறுபாடாக உள்ளது. அந்தந்த இனமக்கள் தாங்கள் அமைத்துக் கொண்ட முறையில் இறைவனை வழிபடுகின்றனர். "தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது வாயினால் பாடி மனதினால் சிந்திக்க வேண்டும்" என்கிறாள் ஆண்டாள் (Soundarraja Ayyangar Swami, 2015). அவ்வகையில் ஆய்வுக்குரிய புதினத்தில் ஈசன் அவர்களுக்குரிய தெய்வமாக இருந்தாலும் சிறுதெய்வ வழிபாட்டு முறைப்படியே அவர்களின் வழிபாடு அமைகிறது. ஹெத்தே கோயில் வழிபாடு, மாதலிங்கேசுவரர் வழிபாடு என்ற இருவகை வழிபாட்டையும் புதினம் சித்திரித்துள்ளது.

## ஹெத்தே கோயில் வழிபாடு

முன்னோர் வழிபாட்டு அடிப்படையில் அமைந்த ஹெத்தே கோயிலில் நெருப்பைக் காக்கும் பணி முதன்மையானதாக அமைகிறது. பால பருவத்தில் உள்ள ஒரு சிறுவன் இப்பணிக்காகத் தேர்ந்தெடுக்கப் படுகிறான். அந்த நெருப்பே தெய்வமாகப் போற்றப்படுகிறது. ஊரார் காணிக்கையாக

அளிக்கும் எருமைகளும், தானியங்களும் நெருப்பைக் காக்கும் பணி புரிபவர்க்கு உரியதாகும். ஆயினும் அவன் ஆடம்பரங்களுக்கு இடங்கொடாமல் மனக்கட்டுப்பாடுடன் இருக்க வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு முறை மட்டும் உண்ண வேண்டும். அவ்உணவையும் அவனே சமைக்க வேண்டும். கோயிலையும், மைதானத்தையும் தவிர வேறு எங்கும் செல்லுதல் கூடாது. பெண்களுடன் பேசக் கூடாது என்ற பல விதிமுறைகளை அச்சிறுவன் பின்பற்ற வேண்டும். இறைப்பணியில் இருப்பவர்கள் கடுமையான விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்ற அவர்களின் கொள்கையை இதன்வழி அறிய இயலுகிறது.

## மாதலிங்கேசுவரர் வழிபாடு

இறைவனோடு தொடர்புடையனவாக திருவிழாக்கள் அமைகின்றன. மலைநகர மக்கள் மாதலிங்கேசுரருக்கு எடுக்கும் திருவிழா குறித்துப் புதினம் சுட்டுகிறது. வற்றாத வளம் தந்த இறைவனுக்கு நன்றி கூறுவதற்காக மக்கள் திருவிழா கொண்டாடுகின்றனர். அழல் வளர்த்து ஹரஹர கோஷத்துடன் அடியவர்கள் அதனுள் நடக்கின்றனர். மக்கள் அனைவரும் ஓரிடத்தில் ஒன்று கூடுகின்றனர். குழல், மத்தளம் போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. முதல் ஈற்றுக் கன்றுகளின் பால் இறைவனுக்குக் காணிக்கையாக்கப்படுகிறது.

இறைவனின் ஆலயம் மிகச்சிறியதாக உள்ளது. தேங்காய், பழம், பால் ஆகியவற்றை மக்கள் காணிக்கையாகக் கொண்டு செல்கின்றனர். உடையர் பிரிவைச் சேர்ந்த சிலர் குருக்களாக உள்ளனர். தேங்காய் உடைத்து, இளநீரைத் தெளித்து ஆசி வழங்குகின்றனர். இளைஞர்கள் அணிஅணியாகச் சேர்ந்து கால்களில் சலங்கைகளும், கைகளில் கோல்களுமாக ஆடிப்பாடுகின்றனர். சிறுவண்ணச் சப்பரங்களைத் தூக்கிச் சிலர் ஆடுகின்றனர்.

## தீமிதித்தல்

மூன்றடி அகலம், ஏழடி நீளமுள்ள பள்ளத்தில் சாம்பிராணிக் கட்டையும் கர்ப்பூரக் கட்டையும் எரிக்கப்படுகிறது. அதனுள் இறங்க மூன்றுமாத விரதம் நோற்க வேண்டும். கோணியில் படுக்க வேண்டும் தீமிதிப்பவர்களின் தலைகள் மழிக்கப்பட்டுச் சந்தனம் பூசப்பட்டுள்ளது. கதம்பமாலை அணிந்துள்ளனர். தீமிதிக்கும் பொழுது குழல், கொம்பு, தாரை, தப்பட்டை முதலிய வாத்தியங்கள் ஒலிக்கின்றன. அரஹர கோஷத்துடன் பிரம்பு வில்களைத் தோள்களில் தாங்கி தீப்பள்ளத்தில் ஏழுமுறை குதித்துக் கடக்கின்றனர். அவர்களின் கால் பெருவிரல் ரோமங்கள் கூடப் பொசுங்கவில்லை என்பதன் மூலம் இறைவன் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையும், இறைவனுக்காகத் தன்னை வருத்திக்கொள்ளும் தன்மையும் புலப்படுத்தப்படுகிறது.

## புனித இடத்தில பெண்களுக்கு அனுமதியின்மை

இறைவழிபாட்டின் முக்கிய நிகழ்வுகளில் பெரும்பாலும் பெண்கள் அனுமதிக்கப்படுவது இல்லை. இந்நிலையை ஆய்வுக்குரிய புதினமும் பிரதிபலிக்கிறது. ஹெத்தே கோயிலுக்குள் பெண்களுக்கு அனுமதி இல்லை. எரி காக்கும் பணியில் இருப்பவனும் பெண்களுடன் பேசக்கூடாது என்ற விதிமுறையும் கடைப்பிடிக்கப்படுகிறது.

## இறைவன் பற்றிய நம்பிக்கைகள், செயல்பாடுகள்

நம்பிக்கைகளே ஒழுங்கையும், விதிமுறைகளையும் உருவாக்கின எனலாம். இயற்கையில் துன்பம் ஏற்படும் என நம்பிய மனிதன் தன்னை அச்சுறுத்தும் காரணிகளுக்கு ஓர் இறைவனை உண்டாக்கினான். துன்பத்திலிருந்து காத்து நன்மையைத் தருபவன் இறைவன் என நம்பினான். அதற்குத் தகுந்து தன் செயல்பாடுகளையும் அமைத்துக் கொண்டான். “உலகுக்கெல்லாம் அடிப்படை மூல காரணமான ஒரு பரம்பொருள் உண்டு என்றும், அதுவே மேலான மெய்ப்பொருள் என்றும் நிலைநாட்டும் கோட்பாடு இறைக்கொள்கையாக அமைந்தது” (Balusamy, 2002). குறிஞ்சித்தேன்

புதினத்திலும் இறைவன் பற்றிய நம்பிக்கைகளையும், அதன் அடிப்படையில் அமைந்த செயல்பாடுகளையும் அறியமுடிகிறது.

## இறைவனே அனைத்திற்கும் காரணம்

எங்கும் நிறை பரம்பொருளாம் இறைவன் அனைவரின் தேவைகளையும் நிறைவேற்றும் பெரும்பணியைச் செய்கிறான். அவனன்றி ஓரணுவும் அசையாது என்பது திருமூலர் வாக்கு. தங்கள் வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொரு செயலுக்கும் இறைவனே காரணம் என்பதை மக்கள் நம்புகின்றனர். இந்நம்பிக்கையைப் புதினமும் பிரதிபலித்துக் காட்டுகிறது. கதைத் தலைவன் ஜோகிக்குத் திருமணமாகி வெகு நாட்கள் கழித்துக் குழந்தைப் பிறக்கிறது. அது ஈசனின் அருள் என்று ஜோகியும், பிறரும் நம்புகின்றனர். ஜோகியின் பெரியதந்தை மாதன் தன் மகன் ரங்கனைச் சந்தித்த போது அது கடவுளின் அருளே என்பதே உறுதியாகக் கூறுகிறார். "இங்கேயே உட்கார்ந்து என்னால் முடிந்தவரை ஈசனைக் கூவி அழைத்துக் கொண்டிருந்தேன். என் குரல் அந்தத் தேவரின் காதில் பட்டுவிட்டது. உன்னையே கொண்டுவந்து விட்டார்" என்று ஆனந்தக் கூத்தாடுகிறார் (Rajam Krishnan, 2011).

"இறைவனுக்குரிய பணி செய்பவர்களுக்கு அனைத்தும் நன்மையாகவே நடக்க வேண்டும் என்ற எண்ணமும் அவர்களிடையே காணப்படுகிறது. எரிகாக்கும் பணியை மேற்கொள்ளப்போகும் ரங்கனிடம் ஜோகி, ஐயன் நெருப்பைக் காத்தால் தானியமெல்லாம் வரும், பூமி கொத்தாமலே விளையும், உன்னிடமே ஈசுவரனார் கனவில் வந்து பேசுவார்" என்று கூறுவதன் மூலம் இதை அறியலாம் (Rajam Krishnan, 2011). ஜோகிக்குக் குழந்தை இல்லாத நிலையில் அவனது தாய் மாதியும், இறைவனுக்குப் பணி செய்த ஜோகிக்கு இதுதான் பலனா? ஒரு குழந்தையை இறைவன் அருளக் கூடாதா? என வேண்டுகிறாள். ஜோகியின் தந்தை லிங்கையாவும் இரிய உடைய ஐயனுக்கு என் பையன் தொண்டு செய்யவில்லையா, நான் அறிந்து ஒரு தீங்கு எவருக்கேனும் செய்தேனா? எனக்கு மட்டும் ஐயன் ஏன் வஞ்சம் புரிய வேண்டும்? என ஆதங்கம் கொள்கிறார். வாழ்வில் நடைபெறும் அனைத்திற்கும் இறைவனே காரணம் என்ற கொள்கை இங்கு புலனாகிறது.

## இறைவன் மீது அச்சம் கொள்ளுதல்

அனைத்திற்கும் முதலாக விளங்கும் இறைவனிடம் மனிதர்கள் சிலநேரம் அச்சமும் கொள்கின்றனர். ரங்கன் கடவுளே இல்லை என்று கூறுபவன். ஆனாலும் அவனுக்குத் துன்பம் நேரும்போது அடிமனதில் அச்சம் தோன்றுகிறது. முதல் நாள் தான் அப்படிச் சொன்னதால்தான் இரிய உடையார் சிற்றப்பனின் கனவில் வந்து அவனையே கேட்டு, அவனுக்குத் தண்டனைக் கொடுக்கிறாரோ என்று அச்சமுறுகிறான்" மேலும் ஊரைவிட்டுச் சென்று பல ஆண்டுகள் கழித்துத் திரும்பியபோது அவனுடைய தந்தையை வழியில் சந்திக்கிறான். கண்ணுக்குப் புலப்படாத ஒரு சக்தியின் ஆணையால் அந்நிகழ்வு நடந்ததாக எண்ணி அச்சமடைகிறான் (Rajam Krishnan, 2011).

லிங்கையா இறைவன் சொன்னவாறன்று எரிகாக்கும் பணிக்கு ரங்கனை முன்மொழிந்ததன் காரணமாகத்தான் வீட்டில் தீயநிகழ்வுகள் நடைபெறுகிறதோ எனப் பயம் கொள்கிறார். பிளேக் நோய் ஊர் முழுவதும் பரவும் சூழலில் அது மாரியம்மன் கோபத்தால் நடந்தது என்றும் மாரியம்மன் பூசை நடைபெறாமல் இருந்ததே அதற்குக் காரணம் என்றும் கூறுகின்றனர். தெய்வத்திற்குரிய வழிபாட்டு முறைகளைச் சரிவரச் செய்யாவிடில், தெய்வம் தண்டிக்கும் என்ற அச்சவுணர்வு இங்கு புலப்படுத்தப்படுகிறது.

## இறைவனின் வழிகாட்டுதல்

வாழ்க்கையின் முக்கியச்சூழல்களில் இறைவன் காட்டிய வழியில் செல்லுதல் என்பதும் மக்களின் நம்பிக்கையாகிறது. எரி காக்கும் பணிக்கு உரியவன் ஜோகி என்பதை இறைவன் லிங்கையாவின் கனவில் வெளிப்படுத்துகிறார். ஜோகியின் அன்னை மாதியும் ஒரு கனவு காண்கிறாள்.

ஒரு பெண் ஆற்றைக்கடந்து வந்த நிலையில் இறைவனைத் துதிக்கிறாள். அப்போது அவளைத் துரத்திவந்த சிப்பாய்கள் பட்டாளம் அவளைத் தொடர இயலாத வண்ணம் ஆற்றில் வெள்ளம் பெருகுகிறது. அக்கனவைக் கண்டபின் அவள் "ஆலமுண்ட ஐயனை நாம் மறந்துவிட்டு, பையன் இல்லையே என்று வருந்தினோம். ஈசுவரர் நினைவு மூட்டினார்" என்று கூறிக் கோவில் இருந்த திசையை நோக்கி வணங்கி வெள்ளப்பணம் முடிந்து வைக்கின்றனர் (Rajam Krishnan, 2011). இறைவன் எவ்வாறேனும் நன்னெறிக்குக் கொண்டுச் செல்வான் என்ற நம்பிக்கையை இதன்வழி அறிய இயலுகிறது.

## துன்பத்தில் இறைவனை நினைத்தல்

இறைநம்பிக்கை அற்றவர்களும் தனக்குத் துன்பம் ஏற்படும்பொழுது மட்டும் இறைவனை வேண்டுகின்றனர் என்பதைப் புதினம் சித்திரிக்கிறது. கதையின் எதிர்நிலைத் தலைவன் ரங்கன் இறைநம்பிக்கை அற்றவன். ஆனால் சிறுவயதில் தனியாகக் காட்டுப்பாதையில் செல்ல வேண்டிய சூழலில் "இரியஉடை ஈசரே, இன்று என்னால் பத்திரமாகச் சேர்த்து விடுங்கள்" என வேண்டுகிறான் (Rajam Krishnan, 2011). கடவுள் இல்லை என்று கூறி அவனது உள்ளம் இக்கட்டான நிலையில் பாவங்களை மன்னிக்கச் சொல்லி இறைஞ்சியதாக ஆசிரியர் அச்சூழலை விவரிக்கிறார். துன்பத்தின் போது இறைவனால் மட்டுமே உதவமுடியும் என்ற கொள்கை இதன்வழிப் புலப்படுகிறது.

## முடிவுரை

பெருந்தெய்வமாகிய சிவன் வழிபாடு மலைவாழ் மக்களிடம் காணப்படுகிறது. முன்னோர்களைத் தெய்வமாக்கும் வழக்கமும் அவர்களிடம் உள்ளது. பக்தி இலக்கியங்கள் குறிப்பிடுவது போன்றே சிவபெருமானின் பல்வேறு பெயர்கள் புதினத்தில் இடம்பெற்றுள்ளன. பெருந்தெய்வமாக இருந்தாலும் சிறுதெய்வத்திற்குரிய வழிபாட்டு முறையைப் பின்பற்றியே வழிபாடு நடத்தப்படுகிறது. இறைப்பணி செய்வதற்கும், வழிபாட்டை நிவர்த்தி செய்வதற்கும் கடுமையான விரதமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இறைவனுக்குரிய சிறப்பான இடங்களில் பெண்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. இறைவனே அனைத்திற்கும் மேலானவன் என்ற இறைக்கொள்கை மலைஇன மக்களிடையே காணப்படுகிறது. கெட்டது செய்தால் இறைவன் தண்டிப்பான் என்ற அச்சமும் உள்ளது. துன்பத்தின் போது இறைவனால் மட்டுமே உதவமுடியும் என்ற எண்ணமும் அவர்களின் இறைக்கொள்கையாக அமைகிறது இக்கால இலக்கியங்களில் அறியப்படும் இறைக்கொள்கைகளை சித்தாந்தங்களோடும், தத்துவங்களோடும் பொருத்திப் பார்க்கவும் இடமுள்ளது என்பதை ஆய்வு வழிமொழிகிறது.

## References


Rajam Krishnan, (2011) Kurinji Then, First Edition, Naam Tamilar Pathippagam, Chennai, India

Balusamy, N., (2002) Living Repository: Volume-4, Reprint, Tamil University, Tanjavur, India.

Soundarraja Ayyangar Swami, R., (2015), Thirupavai Explanation, 10th Edition, Geetha Press, Uttar Pradesh, India

Tholkappiyar, (2000) Tholkappiyam Porulathigaram (Ilampuranar Urai), South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai, India



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License